கதைக் கோடி — மலர் 1. இதழ் 1.

ஸ்ரீ:

சண்பகமொட்டு

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

[368ஆம் பக்கம், 27-5-1919]

சென்னை:

கம்பர் புஸ்தகாலயம்

கம்பர் விலாஸம்

மயிலாப்பூர்

ப்ரபவ(ஷு)] [விலை 2½ அணா.

" Favourite Tales For Children " Series.

ஸ்ரீ:

முகவுரை


ஓர் ஆசிரியன் நற்குலமுடைமை கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை முதலாக எல்லா நற்குணமும் உடையவனாயினும், மாணாக்கர் தலை இடை கடை என முத்திறத்தினராதலான், அவர் திறமறிந்து நூலைக் கற்பித்தல் சிரமமான காரியமாம். அதனிலும் உண்டியிலும் விளையாட்டு முதலியவற்றிலும் மனஞ்செல்லும் இளஞ் சிறாருக்குப் போதித்தல் பின்னும் அதிகச் சிரமமென்பதிற் சந்தேகமில்லை.


இவ் விளஞ்சிறார் தாமே கல்விமேல் அவாவுற்றுக் கற்கப் புகுந்தாலொழிய ஆசிரியர் எடுத்துக்கொள்ளும் சிரமம் அத்தனையும் பயன்படாதொழியும். ஆகவே சிறார்களைக் கற்பிக்கப் புகுமொரு ஆசான் அச்சிறார் மனம் கல்விமேற் செல்லும் வண்ணம் அவரை ஊக்கத்தக்க உபாயம் ஒன்றைச் செய்தேயாகவேண்டும். அவ் வுபாயம் பலவற்றுள்ளும் மிகச் சிறந்தது அவர்க்கு இனிய கதைகளைச் சொல்லி அவர் மனத்தைக் கவர்வதாம். அவ்வாறு செய்யுமிடத்து அவர் முதலிற் கதைகளைக் கேட்க அவாவுற்றுப் பின்னர் அவற்றைப் படிக்க விரும்புவார்.

இங்ஙிலையில் அவர் விருப்புக்கும் அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஏற்றவாறு கதைகள் அமைவது ஆவச்யகமாதலால், அவையெல்லாம் ஒருங்கமையக் 'கதைக்கொடி' என்னும் இத்தொகை நூல் எழுதப் பெற்றது. இத் தொகையிலுள்ள கதைகள் சில்லெழுத்தான் இயன்ற உலக வழக்கப் பதங்களே தொடர்ந்த சிறு வாக்கியங்களால் உரைக்கப்பட்டுள்ளன. கடின ஸந்திகள் பெரும்பாலும் நீக்கப்பெற்றுள்ளன. மூன்றும் வகுப்பிலும் நான்காம் வகுப்பிலும் கல்வி பயிலும் இளைஞர்க்கு இப் புத்தகம் ஏற்றதாகும்.

கம்பர்விலாஸம்
மயிலாப்பூர்
ப்ரபவஹு சித்திரைமீ

இங்ஙனம்,
வே. இராஜகோபாலையங்கார்





ஸ்ரீ :

சண்பகமொட்டு

அத்தியாயம் 1.

குழந்தைக்குப் பேர் வைத்தது

கங்கையின் கரையில் ஒரு மாளிகை இருந்தது. அதில் ஓர் அரசன் இருந்தான். அவன் மிகவும் கிழவன். அவன் மனைவியும் கிழவி. அவர்களுக்குக் குழந்தை இல்லை. அதனால் அவர்கள் வியசனம் அடைந்தார்கள்; சுவாமியை வேண்டினார்கள்; ஏழைகளுக்கு அன்னம் போட்டார்கள்.

இப்படி வெகு காலம் செய்து வந்தார்கள். ஒரு நாள் ராணி கங்கைக்கு ஸ்நாநம் செய்யப் போனாள். அங்கு ஒரு பெரியவர் அவள் முன் வந்தார். அவர் மிகவும் நல்லவர்; படித்தவர்; சுவாமியை எப்போதும் பூஜை செய்பவர்; பின்னாலே வருவதை முன்னாலேயே அறிபவர். அவர் சொல்லுவன எல்லாம் பலிக்கும்.

அவரை ராணி கண்ட உடன் நமஸ்காரம் செய்தாள். அவர், "ராணி! நீ மனத்தில் நினைத்து இருப்பதை நான் அறிவேன்: உனக்குக் குழந்தை உண்டாகும்; ஆனால் அது பெண்ணாகப் பிறக்கும்" என்றார்.

ராணி மிகவும் சந்தோஷம் அடைந்தாள்; கிழவரை மறுபடி நமஸ்காரம் செய்தாள்; அரமனைக்கு போனாள். ராஜாவின் இடம் சொன்னாள். அன்றுமுதல் அவர்கள் ஸந்தோஷம் ஆகவே இருந்தார்கள்.

பத்து மாஸம் ஆயின. பெரியவர் சொன்னபடி ராணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது வெகு அழகாய் இருந்தது. ராணிக்கு உண்டான சந்தோஷம் மிகவும் பெரிது. ராஜனை அவள் கூப்பிட்டாள்: "கணவரே! நமது குழந்தைக்குப் பேர் இடவேண்டுமே; கங்கை நதியின் கரையில் இருக்கும் பெரியவரை அழையும்" என்றாள்.

ராஜன் அப்படியே அந்தப் பெரியவரை அழைத்தான். அவர் தம்மோடு பதினொரு வேறு கிழவரையும் அழைத்து வந்தார். இந்தப் பதினொரு கிழவரும் நல்லவர்கள் ; படித்தவர்கள் ; சுவாமியை எப்போதும் பூஜிப்பவர்கள் ; பின்னாலே வருவதை முன்னாலே அறிபவர்கள் ; இவர்கள் சொல்லுவன யாவும் பலிக்கும். இவர்கள் பெரிய ரிஷிகள்.

இந்த ரிஷிகள் எல்லாரும் குழந்தைக்கு 'சண்பகம்' என்று பேர் வைத்தார்கள். ஒரு கிழவர், "இந்தப் பெண் நல்ல அழகியாய் இருக்கட்டும்" என்றார். இரண்டாம் கிழவர், "இவள் குணம் உடையவள் ஆகட்டும்" என்றார். மூன்றாம் கிழவர், "இவள் பணக்காரி ஆய் இருக்கட்டும்" என்றார். நான்காம் கிழவர், "இவள் கணவன் சிறந்த சூரனாய் இருக்கட்டும்" என்றார். ஐந்தாம் கிழவர், "இவள் நல்ல புத்திரர்கள் பெறட்டும்" என்றார். ஆறாம் கிழவர், "இவள் தன் கணவனுடைய இஷ்டம் போல நடப்பவளாய் இருக்கட்டும்" என்றார். ஏழாம் கிழவர், "இவளது கணவன் இவளை ஆசையாக வைத்து இருக்கட்டும்" என்றார். எட்டாம் கிழவர், "இவள் படித்தவளாக இருக்கட்டும்" என்றார். ஒன்பதாம் கிழவர், "இவள் பாடுவதிலும், சித்திரம் எழுதுவதிலும் மற்ற எல்லா

நாகரிக வித்தைகளிலும் கெட்டிக்காரி ஆக இருக்கட்டும்'' என்ருர். பத்தாம் கிழவர், இவளுடைய குரல் இனிமை ஆக இருக்கட்டும்'' என்ருர். பதினேராம் கிழவர், "இவள் மிகவும் பொறுமை உடையவள் ஆக இருக்கட்டும்'' என்ருர்.



கேட்ட ராஜனும் ராணியும் ஊர் ஜனங்களும் மிகவும் ஸந்தோஷம் கொண்டார்கள் ; கை கொட்டினர்கள் ; "ஜய ! ஜய ! சண்பகம் வாழ்க !'' என்று பெருங் கூச்சல் இட்டார்கள் ; குதித்தார்கள் ; பூக்களை ஆகாசத்தில் எறிந்தார்கள்.

ராஜா எல்லாருக்கும் சாப்பாடு போட்டான். பொன்னுகவே அள்ளி எல்லாருக்கும் கொடுத்தான். எல்லாரும், "ராஜன் வாழ்க!" என்று பெரிய கூச்சல் போட்டார்கள்; பிறகு வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அத்தியாயம் 2.

சண்பகத்திற்கு ஆபத்து வந்ததும் அது தீர்ந்ததும்

ராணியும் ராஜனும் வெகு சந்தோஷம் அடைந்தார்கள்; "இனி நமது குழந்தைக்கு ஒரு குறைவும் இல்லை" என்று நினைத்தார்கள். வந்த கிழவர்களை வாழ்த்தினார்கள்.

இப்படி இருக்கையில் புதிதாக ஒரு கிழவர் வந்தார். இவர் கங்கைக் கிழவருடைய தமையன்; மிகவும் பொல்லாதவர்; அதனால் இவரை இவர் தம்பி கூப்பிட இல்லை; அதற்கு ஆக இவர் கோபம் கொண்டார்; ராஜனை வைதார்.

ராஜன் இவருக்கு நமஸ்காரம் செய்தான்; "பெரியவரே! நீர் இருப்பது எனக்குத் தெரி

யாது. அதனால் நான் அழைக்க இல்லை" என்ருன். இவர் அதிகம் கோபம் கொண்டார்: "ஏ! ராஜனே என்னை அழையாமல் உன் குழந்தைக்கு நீ பேர் வைத்தாய் அல்லவா? அதனால், உன் குழந்தை பதினைந்தாம் வயதில் ஊசி குத்தி உயிர் இழக்கும்" என்று சொன்னார்.

ராஜனும் ராணியும் அவர்காலில் விழுந்து கெஞ்சி வேண்டினார்கள்: ஐயோ! நாங்கள் இத்தனை காலம் கழித்து ஒரு குழந்தையை அடைந்தோமே! இப்படி அதற்கு ஆபத்தை வர நீர் சொல்லுவது நியாயமோ?" என்ருர்கள்; அழுதார்கள்; கெஞ்சினார்கள். அந்தக் கிழவரோ சிறிதும் இரங்க இல்லை; கோபம் ஆகவே போய் விட்டார்.

அதன் பிறகு கங்கையின் கிழவர் குழந்தை அருகே வந்தார். ராஜனையும் ராணியையும் வியசனம் அடைய வேண்டாம் என்ருர்; "ராஜனே! என் தமையன் சொன்னது பலித்துவிடும். ஆனால், அதை நான் சிறிது மாற்றிவிடுவேன்; எப்படி என்ருல், மனிதருக்கு வயவு நூறு வருஷம் அல்லவா? அந்த நூறு வருஷமும் இவள் செத்தவள் போல தூங்குவாள். அதன் பிறகு விழித்து எழுவாள்" என்ருர்; பிறகு மறைந்து போனார்.

ராஜனும் ராணியும் கொஞ்சம் சந்தோஷம் அடைந்தார்கள். பிறகு ராஜன் நெடுநேரம் ஆலோசித்தான்; தன் நாட்டில் ஓர் உத்தரவு செய்தான். "நமது தேசத்தில் ஒருவரும் தையல் வேலை செய்யவே கூடாது என்று தமுக்கு அடி" என்றான். ஏன் எனில், ஊசியால் ராஜகுமாரிக்கு அபாயம் வரும் அல்லவா? அதை அவன் தடுக்க முயன்றான்.

ராஜன் இடம் ஜனங்கள் பக்ஷம் ஆக இருந்தார்கள்; அதனால், அவர்கள் தமது ஊசிகளை ஒடித்து விட்டார்கள். பிறகு அவற்றை மண்ணில் புதைத்தும் விட்டார்கள். காசி தேசத்தில் ஊசி நாசம் ஆகி, அதன்பேர் ஆசைக்கும் பேசப்படாது.

ஏழை ஜனங்களின் வேஷ்டி புடைவைகள் கிழிந்து போனால் ராஜனே புதிது வாங்கிக் கொடுத்தான். அவர்கள் உடுத்து ஸந்தோஷம் அடைந்தார்கள்.

அத்தியாயம் 3.

சண்பகம் மோட்டு ஆனது

காசி ராஜனுக்கும் ராணிக்கும் மறுபடி ஸந்தோஷம் உண்டாகி விட்டது. அவர்கள் குழந்தையை ஆசையோடு வளர்த்து வந்தார்கள். அது வளர்ந்து ஐந்து வயது பெண் ஆயிற்று. வெகு அழகும் நல்ல குணமும் உடையது ஆயிற்று.

ராஜா நல்ல உபாத்தியாயரை வருவித்தான்; சண்பகத்துக்குப் பாடம் சொல்லி வைக்க சொன்னான். உபாத்தியாயர் நல்லவர்; புத்தி சாலி; படித்தவர்; குணம் உடையவர். அவர் சண்டகத்துக்கு எல்லாம் சொல்லி வைத்தார். அவள் சீக்கிரம் கற்று அறிந்து கொண்டாள்.

பிறகு அவர் பாட்டு சொல்லி வைத்தார்; அதன் பிறகு சித்திரம் எழுதக் கற்று கொடுத்தார். அதன்பிறகு எல்லா நாகரிக வித்தைகளையும் கற்பித்தார். கிழவர்கள் சொல்லின்படியே அவள் நடந்தாள்; எல்லாம் தெரிந்து கொண்டாள். கெட்டிக்காரி ஆனாள். காசிதேசம் முழுவதும் அவள் பெயர் பரவிற்று. ஜனங்கள் சண்பகத்தைப்பார்த்து ஸந்தோஷம் அடைந்தார்கள்.

அவள் பக்ஷமாய் எல்லார் இடத்தும் பேசுவாள் ; ஏழைகளை ஆதரிப்பாள் ; பெரியவர்கள் இடத்து வணக்கம் ஆக இருப்பாள் ; படித்தவர்கள் இடத்து தான் கற்றதைச் சொல்லுவாள். இதனாலே அவள் இடம் எல்லாரும் பக்ஷமாக இருந்தார்கள்.

இப்படி இருக்கையில், அவளுக்கு வயது பதினான்கு நிரம்பிற்று. பதினைந்தாம் வயது பிறந்தது. அந்தத் தினத்தில் ராஜனும் ராணியும் ஏழைகளுக்கு நிரம்பவும் சோறு போட்டார்கள். படித்தவர்களுக்கு நல்ல பரிசு கொடுத்தார்கள். நகரத்து ஜனங்களுக்கு விருந்து செய்தார்கள்.

அந்த விருந்துக்கு ராஜ குமாரியின் தோழிகள் பலர் வந்து இருந்தார்கள். அவர்களைச் சண்பகம் கண்டதும் மிகவும் ஸந்தோஷம் கொண்டாள் ; "நாம் விளையாடுவோமா ?" என்றாள். எல்லாரும், ஸரி, என்றார்கள்.

உடனே ஒளிந்து பிடித்து விளையாட ஆரம்பித்தனர். முதலில் சண்பகம் கண் பொத்திக் கொண்டாள். மற்றவர்களை, "ஒளித்துக் கொள்ளுங்கள்" என்றாள். அவர்கள் ஒளிந்து கொண்டார்கள். அவர்களைப் பிடிக்கும் பொருட்டு ராஜ குமாரி அரமனை எங்கும் தேடினாள். அவர்களுக்கு ஒருத்தி ஆவது அகப்பட இல்லை.

அவள் மேலும் தேடிக்கொண்டு போனாள். ஒரு மண்டபம் போய்ச் சேர்ந்தாள். அது பாழ் அடைந்த மண்டபம். அங்கே ஒருவரும் போனது இல்லை. சண்பகம் உள்ளே போனாள். அங்கே ஒரு கிழவி துணி தைத்துக்கொண்டு இருந்தாள் ; சண்பகம் தைத்ததே கிடையாது. ஆதலால், அந்த வித்தை அவளுக்கு மிகவும் விசித்திரம் ஆக இருந்தது. அதை அவள் கற்றுக்கொள்ள ஆசை கொண்டாள்.

கிழவி இடம் போனாள் : "கிழவீ ! எனக்கு இந்த வித்தையை நீ கற்பிப்பாயா ?" என்றாள். உடனே கிழவி, "ஸரி ; கற்பிக்கிறேன்" என்றாள் : இரண்டு தையல் போட்டுக் கொடுத்தாள். பிறகு சண்பகம் ஊசியை வாங்கினாள் ; தன் அறைக்குப் போனாள் : தையல் போட்டாள் ; இரண்டு தையல் போட்டதும், ஊசியால் விரலில் குத்திக் கொண்டாள்.

உடனே நோய் பொறுக்காமல் மூர்ச்சை ஆய் பூமிமேல் விழுந்து விட்டாள். அதைக் கிழவி கண்டாள் ; வெகு ஸந்தோஷம் அடைந்தாள் ; "உன் கண் மூடினவா ? இனி எப்பொழுது உன் கண் விழிக்குமோ ? விருத்த பிறகு சண்பகம் ஆகலாம் ; இப்பொழுது சண்பகமொட்டு ஆகுக" என்று சொன்னாள் ; பிறகு மறைந்து போனாள்.

அத்தியாயம் 4.

சண்பகம் நூறு வருஷம் தூங்கியது

கிழவி ஆக இருந்தவள் நிஜமான கிழவி அல்லள். சண்பகம் சாக வேண்டும் என்று சொன்ன துஷ்டரான கிழவரே; கிழவி வேஷத்துடன் அங்கே வந்து இருந்தார்.

அவர் அரண்மனையை விட்டுப் போனதும், மற்ற ரிஷிகள் பதினொரு பேரும் வந்தார்கள்; சண்பகத்தை அயர்ந்து தூங்கும்படி செய்தார்கள். பிறகு "இந்த அரமனையில் உள்ள எல்லாரும் தூங்கட்டும்" என்றார்கள்.

உடனே ராஜனும் ராணியும், மந்திரி பிரதானி முதலியவரும் தூங்க லாயினர்; அந்த அந்த அரமனையில் எறும்புகூட அரிசி வாயுடன் ஊராது தின்று தூங்கிற்று. குதிரை, ஆடு, பசு முதலியனவும் வாயும் புல்லுமாக தூங்கின; நெருப்பு கூட விறகை எரிக்காது தூங்கிற்று. சமையல் செய்வோர் சோறு வடித்தபடி தூங்கினர்; பணியாரம் செய்கிறவர் பாகு கிளறியபடி தூங்கினர். சாதம் சாப்பிட்டவர் கவளத்தை மெல்லாது நித்திரை செய்தனர்; ஸ்நாநம் செய்தவர் தலையில் நீர் கொட்டிக்கொண்டபடி

உறங்கினர். இப்படியே ஒவ்வொருவரும் தம் தம் வேலையில் இருந்தபடி தூங்கி விட்டனர்.

அதை அந்த ரிஷிகள் பதினொருவரும் பார்த்தார்கள்; "இந்த மாளிகையையும் இதில் உள்ள ஜனங்களையும் நூறு வருஷம் வரையில் எப்படி காப்பது?" என்று ஆலோசித்தனர். கடைசியில் அந்த அரமனையைச் சூழ்ந்து ஒரு பெரிய காட்டை உண்டாக்கினர்; அதில் முள் ளும் கல்லும் உண்டாகும்படி செய்தனர்; பாம்பு தேள்களையும் சிங்கம் புலிகளையும் வசிக் கும்படி செய்தனர்.

நாள் ஆக ஆக அரமனையின் சிகரமே தெரியாதபடி காடு உயரமாக வளர்ந்து விட் டது. உள்ளே குளவிகளும் தேள் முதலிய விஷ ஜந்துக்களும் நிறைந்து விட்டன. அவை அந்தக் கிழவர்களுடைய மந்திர பலத் தால் உண்டானவை. ஆதலால், அவைகளில் ஒன்றும் அரசன் மாளிகைக்குள் போக இல்லை. வெளியில் இருந்து உள்ளே நுழையும் மனி தரை அவை கொன்று தின்று கொண்டு வந்தன.

காசி தேசத்து ஜனங்கள் பலதரம் அக் காட்டை அழிக்க முயன்றார்கள். எத்தனை பேர் வந்தாலும், செங்குளவிகளும் கருங்குளவிகளும்

வந்து கொட்டும். அவை கொட்டினுல், மனிதர் பிழைப்பது இல்லை. ஆதலால், ஒருவரும் காட்டின் அருகுசெல்லாமலே போய் விட்டனர்.

அந்த வனத்தில் இருந்து வரும் காற்றே நல்ல வாஸனை வீசிற்று. ஏன் எனில், உள்ளே சந்தனமரங்களும் சண்பக மரங்களும் வளர்ந்து இருந்தன. ரோஜா மிகுதியும் பூத்து இருந்தது. ஜாதியும் முல்லையும் மொட்டு அரும்பி, மலர்ந்து இருந்தது. தடாகங்களில் தாமரை பூத்திருந்தது.

இந்த அழகைப் பல ராஜ குமாரர்கள் கண்டார்கள். உள்ளே சண்பகம் என்ற ராஜ குமாரி தூங்குகிருள் என்றும் கேட்டார்கள். அவர்களுக்கு அந்த அழகிய கன்னிகையைக் காண ஆசை உண்டாயிற்று ; காட்டில் நுழைந்தார்கள். சிறிது தூரமும் உள்ளே செல்ல மாட்ட இல்லை ; குளவிகள் கொட்டி நடு வழியில் இறந்தார்கள். சிலர் முள் பீறி மாண்டார்கள். சிலர் பாம்பு கடித்து இறந்தார்கள். சிலர் புலி கிழித்து ஒழிந்தார்கள். இப்படி ஆகவே ஒருவராவது மாளிகையின் அருகில் போக இல்லை. இப்படி நூறு வருஷகாலமும் கழிந்தது.

அத்தியாயம் 5.

மூன்று குமாரர்கள் பிரயாணம் செய்தது

இந்த அதிசயம் எல்லா தேசத்துக்கும் தெரிந்தது. தென் நாட்டிற்கும் செய்தி எட்டிற்று. தென்நாடு சேரர் பாண்டியர் சோழர் என்ற மூன்று வேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. சேரன் குமாரனும், பாண்டியன் குமாரனும், சோழன் குமாரனும், இச்செய்தி கேட்டார்கள். காசிதேசம் புறப்பட்டார்கள். போகும் போது மூவரும் வழியில் ஓர் இடத்தில் சேர்ந்து கொண்டார்கள். வெயில் மிகவும் உஷ்ணமாகக் காய்ந்தது. அவர்கள் களைத்துப் போனார்கள்.

அப்பொழுது ஒரு பெரிய ஆலமரம் தென்பட்டது. அதன் அருகில் ஒரு குளமும் இருந்தது. மூவரும் மரத்து நிழலில் உட்கார்ந்தார்கள். களை ஆறினார்கள்; பிறகு குளத்தில் ஸ்நாநம் செய்தார்கள்; கையில் கொண்டுவந்து இருந்த சாப்பாட்டை உட்கொண்டார்கள்.

பிறகு மரத்து அடியில் படுத்து நித்திரை செய்தார்கள். மறுபடி எழுந்து பயணம் ஆனார்கள். அப்பொழுது அங்கு ஒரு எறும்

பின் புற்று பெரிதாக இருந்தது. அதை பாண்டியன் குமாரனும் சேரன் குமாரனும் பார்த்தார்கள்; "இதை நாம் இடித்துக் கொளுத்துவோம்; எறும்புகள் என்ன செய்கின்றன, பார்ப்போம்" என்றார்கள்.

சோழன் குமாரன், "கூடாது, கூடாது! சிறு பிராணிகளை நாம் கொல்ல வேண்டாம்" என்றான். அவர்கள், ஸரி, என்று புற்றை இடிக்காமல் போய்விட்டார்கள்.

வேறு ஓர் ஊருக்குப் போனார்கள். அவர்களுக்குப் பசி அதிகமாய் விட்டது. கையில் ஆகாரம் இல்லை. அங்கு ஒரு பெரிய ஏரி இருந்தது. அதில் பல அன்னங்கள் விளையாடிக்கொண்டு இருந்தன. "இவற்றை நாம் பிடித்துத் தின்போமா?" என்று அவ் இருவரும் கேட்டார்கள். சோழன் குமாரன், "கூடாது, கூடாது! இதோ இந்த மாமரத்தில் நிரம்பவும் பழம் இருக்கின்றன; தின்னலாம்" என்றான்.

ஸரி, என்று அவ் இருவரும் அன்னங்களைப் பிடிக்க இல்லை; மாமரத்தில் ஏறினார்கள்; கனி பறித்துத் தின்றார்கள்.

அங்கு இருந்து வேறு தேசம் புறப்பட்டார்கள். வழியில் ஒரு காடு இருந்தது. அதன்

நடுவில் ஒரு மரத்தில் தேன் அடைவைத்து இருந்தது. அந்த அடையில் தேன் நிரம்ப இருந்தது. முதல் இருவரும் "இந்த அடையை எடுத்து, தேன் சாப்பிடுவோம்" என்றார்கள்.

சோழன் மகன், "வேண்டாம், வேண் டாம்! இதோ தேன் ஒழுகுகிறது. இதை ஏந்திக் குடிப்போம்" என்றான். அவர்கள், ஸரி என்று குடித்தார்கள்.

அங்கு இருந்து காசி தேசம் வந்தார்கள். அரமனையைச் சுற்றி இருந்த பெருங் காட்டைக் கண்டார்கள். சேரன் மகனும் பாண்டியன் மகனும் உடனே பயந்து போனார்கள். சோழன் மகனே அவர்களைத் தேற்றினான்.

பிறகு அவனே முதலில் உள்ளே நுழைந்தான். குளவிகளோ அவனைக் கொட்ட இல்லை; பாம்புகளும் கடிக்க இல்லை; சிங்கம் புலிகளும் பாய இல்லை; முள்ளுகளும் குத்த இல்லை. காடும் அவனுக்கு வழி விட்டது.

அவன் எல்லாவற்றையும் தாண்டினான். அரமனை அருகில் சென்றான். வாசலில் காத்து நிற்பவர் தூங்கியபடி நின்றார். உள்ளே போனான். வேலை ஆள்களும் பாதி வேலையில் தூங்கினார்கள். சமையல் அறைக்குள் போனான்.

அங்கே சமையல் செய்வோர் கரண்டி பிடித்த படி தூங்கினர். சாப்பாட்டு அறைக்குள் போனான். அங்கே ஜனங்கள் வாயும் சோறு மாக உறங்கினர். குதிரைச் சாலையில் போனான். வாயும் புல்லுமாகப் பல குதிரைகள் தூங்கின.

பிறகு ராஜ மண்டபம் போனான். அங்கே கிழவர்களான ராஜனும் ராணியும் தூங்கினர். மந்திரி முதலானப் யாவரும் தூங்கினர்.

இப்படி எல்லாரும் தூங்கும் அதிசயம் பார்த்துக்கொண்டு, மேலும் போனான். ஒரு பாழ் மண்டபம் போய்ச் சேர்ந்தான். கதவைத் திறந்து, உள்ளே போகிறான்! தரைமேல் ஒரு பெண் தூங்குவது கண்டான். அவள் வெகு அழகாய் இருந்தாள்! பதினைந்து வயது கன்னிகை போலவே இருந்தாள்! ஆனால் அவளுக்கு நூற்றுப் பதினைந்து பிராயம் அல்லவா?

அத்தியாயம் 6.

தூங்கிய எல்லோரும் விழித்து எழுந்தது

சோழன் குமாரனுக்கு அந்த அழகியைக கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. அவன் குனிந்து அவள் முகத்தை நன்ருய் பார்த்தான். அவள் மெல்ல மூச்சு விட்டாள். அதன்மேல் அவன் அவளை ஒரு முத்தம் இட்டான்.

உடனே அவள் திடுக்கிட்டு எழுந்தாள்; கிழவி எங்கே யென்று பார்த்தாள்; அவளைக் காண இல்லை; ராஜகுமாரனைக் கண்டாள். அவன் வெகு அழகாய் இருந்தான். அவனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தாள்.

இதே தருணம் கிழ ராஜனும் ராணியும் விழித்து எழுந்தார்கள். அரமனையில் உள்ள எல்லாருமே விழித்துக் கொண்டார்கள். நெருப்பும் விழித்துக் கொண்டது; பாகுக்கு உஷ்ணத்தைக் கொடுத்தது. பாகு கிளறியவளும் விழித்து எழுந்தாள். கரண்டியைத் திருப்பினுள். ஜலமும் விழித்து எழுந்தது; பாத்திரத்தில் இருந்தது, ஸ்நாநம் செய்தவன் தலையில் விழுந்தது. ஸ்நாநம் செய்தவ

னும் விழித்துக் கொண்டான் ; ஸ்நாநம் செய்து, கரை ஏறினன்.



அப்படியே குதிரைகளும் நாய்களும் விழித்து எழுந்தன. காவல் காத்தவரும் வேலை

செய்தவரும் விழித்துக் கொண்டார்கள். அரமனையை நாற்புறமும் சுற்றி இருந்த காடும் மாயமாய் மறைந்து போய்விட்டது.

அக்காட்டின் வெளியே பாண்டியன் மகனும் சேரன்மகனும் நின்றார்கள் அல்லவா ? அவர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். அரமனை நோக்கி வந்தார்கள். அங்கே சோழன் மகனையும் சண்பகத்தையும் கண்டார்கள். எல்லாரும் சேர்ந்து கிழ அரசன் முன்னே வந்தார்கள். ராஜனும் ராணியும் அவர்களைக் கண்டு ஸந்தோஷம் அடைந்தார்கள். சேரன் மகனும் பாண்டியன் மகனும் சண்பகத்தைப் பார்த்த உடன் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசை கொண்டார்கள்.

கிழ ராஜனை நோக்கி, "வேந்தே ! உன் குமாரியை எங்கள் இருவரில் ஒருவரே கல்யாணம் செய்து கொள்ளவேண்டும். இச் சோழன் மகன் உமது குமாரியை முதலில் கண்டான் என்பது உண்மைதான். ஆனால் அதற்காக அவனுக்கு அவளைக் கொடுக்கக் கூடாது : நாங்களே கஷ்டப்பட்டு இங்கு வந்தோம் ; காட்டை அழித்தோம். இவன் எங்களோடு சும்மா வந்தவன்" என்று சொன்னார்கள்.

ராஜனுக்கு உண்மை விளங்க இல்லை. அவன் மயங்கினான் ; இந்த ஸமயத்தில் கங்கை

நீர்க்கிழவர் வந்தார். அவரிடத்தில் கிழராஜன் அந்த இருவரும் சொன்னபடி சொன்ஞன். கிழவர் சோழன் மகனை நோக்கி, "நீ என்ன சொல்லுகிருய் ?" என்று கேட்டார் ; அவன் நடந்தபடி உண்மையைச் சொன்ஞன்.

பிறகு கிழவர் சிறிது ஆலோசனை செய் தார் ; "ராஜ குமாரர்களே ! உங்களை மூன்று தரம் பரீக்ஷை செய்வேன் ; உங்களில் எவன் மூன்று தடவையும் ஜயிப்பானே அவனே சூரன் ; அவனுக்கே இவளைத் தருவேன். தோற்றவர்கள் நாயாகவும் குதிரை ஆகவும் மாறி, ஜயித்தவனுக்கு வேலை செய்யவேண் டும்" என்ருர்.

சேரன் மகனும் பாண்டியன் மகனும் ஸரி, என்ருர்கள். சோழன் மகன், "சுவாமி யின் அருள் போல நடக்கிறது. எனக்கும் ஸம்மதமே" என்ருன்.

முதலில் கிழவர் சேரன் மகனை ஓர் அறைக்கு அழைத்துச் சென்ருர். அந்த அறையில் உச்சிமோடு வரையில் எள்ளும் கோதுமையும் கலந்து கொட்டி இருந்தன. கிழவர் அவனுக்கு அதைக் காட்டினர் ; 'இதை எள்ளு வேறு கோதுமை வேருக நீ பிரிக்க வேண்டும்" என்ருர்." பிறகு அவர் மறைந்து போனர்.

அத்தியாயம் 7.

பாண்டியன் மகனும் சேரன் மகனும் பரீக்ஷையில் தோற்றது

காலை முதல் மாலை வரை சேரன் மகன் வேலை செய்தான். குறுணி தான்யம் கூட பிரிக்க இல்லை. இருள் சூழ்ந்து கொண்டது. கிழவர் வந்தார்; ராஜகுமாரன் செய்த வேலையைப் பார்த்தார்' "சீ! உன் சாமர்த்தியம் இவ்வளவு தானா!" என்றார். அன்று போய் விட்டார்.

மறுநாள் கிழ ராஜனது மோதிரத்தை வாங்கினார்; சேரன் மகனுக்குக் காட்டினார்; கங்கையில் எறிந்தார்; "இதையாவது இருட்டும் முன் எடுத்துவா" என்றார்.

ராஜ குமாரன் காலை முதல் அந்தி வரையில் முழுகி முழுகிப் பார்த்தான்; நதி வெகு ஆழம் ஆக இருந்தது. நீர் விசையாய் இழுத்தது. தன் நாட்டில் உள்ள சுள்ளி ஆறு போல இல்லை என்று கண்டான். இருட்டியும் போயிற்று. மோதிரமோ அகப்பட இல்லை, பெரியவர் வந்தார்; உனக்குச் சாமர்த்தியம் இவ்வளவு தானா? நாளை வேறு பரீக்ஷை செய்கிறேன்" என்றார். மறைந்து போய் விட்டார்.

மறு நாள் மூன்று ரோஜா மலரைக் காட்டினர் ; "இவற்றில் எது உயர்ந்தது ?" என்றார். பூவை ராஜ குமாரன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். மூன்றும் ஒரே விதமாக இருந்தன. அவன் ஒன்றும் சொல்ல மாட்டாமல் விழித்தான்.

பெரியவர். "சீ ! நீ வேலை செய்ய வேண்டியவன்தான்" என்றார். கிழ ராஜன் அவனை உடனே சிறையில் அடைத்து விட்டான்.

பிறகு கிழவர் பாண்டியன் குமாரனை அழைத்தார். எள்ளும் கோதுமையும் கலந்து வைத்திருந்ததைக் காட்டினர் ; சேரன் குமாரன் இடம் சொன்னது போலவே சொன்னார்.

அதை அவன் காலை முதல் அந்தி வரையில் புடைத்துக் கொழித்தான். ஒரு கலத்துக்கு மேலே பிரிக்க முடிய இல்லை. பெரியவர் வந்தார் : 'என்ன செய்தாய் ? என்று கேட்டார். ராஜ குமாரன் தலை குனிந்து நின்றான்.

"சீ ! உன் வல்லமை இவ்வளவு தானா ?" என்றார் ; மறுநாள் ராணி கை மோதிரத்தை வாங்கினர். கங்கையில் எறிந்தார் ; "இதை அஸ்தமனத்திற்குள் எடுத்துவா" என்றார்.

பாண்டியன் மகன் நீந்துவதில் சதுரன், தன் ஊர் வையை ஆற்றில் நீர் விளையாடி மிக

வும் தேர்ந்து இருந்தான். "இதோ கொண்டு வந்தேன்" என்று ஜலத்தில் குதித்தான்; முழுகி முழுகிப் பார்த்தான்; மோதிரம் அகப் பட இல்லை; அஸ்தமனம் வரையில் தேடி ஞன்; அது அகப்படாது போயிற்று; மிக்க வெட்கத்தோடு கரைக்கு வந்தான்.

கிழவர் வந்தார்; "என்ன செய்தாய்?" என்ருர். அவன் முகம் வாடி நின்ருன். அவர், "அது போகட்டும்; இந்த மூன்று ரோஜாவில் எது உயர்ந்த பூ?" என்ருர்.

பாண்டியன் மகன் பலதரம் பூவைத் திருப் பித் திருப்பிப் பார்த்தான்; மூன்றும் ஒரே மாதிரியாக இருந்தன. வித்தியாசம் ஒன்றும் சொல்ல மாட்டாமல் விழித்தான். பெரியவர், "சீ! நீ பிரயோஜனம் இல்லாதவன்" என்ருர். காசி ராஜன் அவனேயும் சிறையில் அடைத்து விட்டான்.

பிறகு பெரியவர் சோழன் மகனே அழைத் தார். அவனுக்கும் தானியம் கலந்த அறை யைக் காட்டினர். "நீ இதில் உள்ள தானி யத்தை வேறு வேருய்ப் பிரிக்க வேண்டும்" என்ருர். பிறகு அவர் மறைந்து போனர்.

அத்தியாயம் 8.

சோழன் மகன் பரீக்ஷை கொடுத்தது

மலையே போலக் குவிந்து கிடக்கும் அக் கலப்புத் தானியத்தைக் கண்டு சோழன் மகன் கலங்கி விட்டான்; "இதை எப்படி வேறே பிரிப்போம்?" என்று ஏக்கம் கொண்டான்; அங்கேயே வியசனமாய் உட்கார்ந்தான்.

அந்த வேளையில் ஓர் எறும்பு அருகில் ஊர்ந்து வந்தது. அதை அவன் பார்த்தான். "ஆ! ஆ! நான் இப்போது எறும்பு ராஜனாய் இருந்தால், நல்லதாய் இருக்குமே! என் கூட்டத்தோடு வந்து இந்த வேலையைச் செய்து விடுவேனே!" என்றான்.

அதை அந்த எறும்பு கேட்டது; "ராஜகுமாரா! நான் எறும்பு ராஜன் தான்; உன் சிநேகிதர்கள் என் புற்றை அழிக்க நினைத்தார்கள்; அப்போது நீ அவர்களை விலக்கினாய்; என் கூட்டத்தை ரக்ஷித்தாய்; நானும் பிழைத்தேன்; நீ தயாளு; உனக்கு நான் உபகாரம் செய்வேன்" என்றது.

உடனே அது பல கோடி எறும்புகளுடன் வந்தது. எல்லாம் பர பர என்று வேலை செய்தன. மாலை இருபத்தைந்து நாழிகைக்குள்

அத்தனை தானியத்தையும் பிரித்து விட்டன. எள்ளை வேறு குவியலாகவும், கோதுமையை வேறு குவியலாகவும் குவித்து விட்டன. பிறகு எல்லாம் மறைந்து போயின.

அவ்ஸ்தமான சமயத்திற்கு முதியவர் வந்தார்; தானியம் பிரித்து இருப்பதைப் பார்த்தார்; வெகு ஸந்தோஷம் அடைந்தார். அரசகுமாரனைத் தட்டிக் கொடுத்தார்; "நாளை வேறு வேலை சொல்லுகிறேன்; செய்யலாம்" என்றார்.

காசி ராஜனும் சந்தோஷம் அடைந்தான். ராஜ குமாரனுக்கு விருந்து செய்தான். சூரன் என்று மெச்சிக் கொண்டான். சோழன் மகன் அன்று ராத்திரி நன்றாக நித்திரை செய்தான்.

மறு நாள் எழுந்தான். கடவுளை எண்ணி ஸ்துதி செய்தான். அப்போது கிழவர் வந்தார்; சண்பகத்தின் கணையாழியை வாங்கினார்; ராஜ குமாரனுக்குக் காட்டினார்; அதைக் கங்கையில் எறிந்தார்; "எடுத்துவா அதை" என்றார்.

சோழன் புதல்வன் துணிகரம் உடையவன்தான். ஆனாலும், "நீர் ஓடும் விசையில் அந்த மோதிரம் எப்படி அகப்படும்?" என்று அவன் கலங்கினான். "இருந்தாலும் ஒரு தரம்

முழுகுவோம்" என்று நினைத்தான். நீரில் கால் வைத்தான்.

உடனே ஓர் அன்னம் வந்தது; அது ராஜகுமாரன் முன் நின்றது; "என்னை நீ தெரிந்து கொண்டாயா ?" என்றது. சோழன் மகன், "தெரிய இல்லையே" என்றான். அது, "நானும் என் தோழர்களும் அந்த ஏரியில் இருந்தோம்; நீயும் உன் தோழர் இருவரும் வந்தீர்கள்; உன் தோழர்கள் எங்களைப் பிடிக்க வந்தார்கள்; நீ அவர்களை விலக்கினாய்; இப் போது ஞாபகம் வந்ததா ?" என்றது. ராஜ குமாரன் "ஆம் ஆம் !" என்றான்.

அன்னம், "நீ முன்னம் எனக்கு உதவி செய்தமையால், இப்போது உனக்கு நான் உதவி செய்வேன்; நீ கரை ஏறு" என்றது.

சோழன் மகன் கரை ஏறினான். அன்னம் நீரில் முழுகிற்று. கொஞ்ச நேரத்துக்குள் மூன்று மோதிரங்களையும் கொத்தி வந்தது. அவற்றில் ஒன்று காசி ராஜனது; மற்றொன்று ராணியினது; மூன்றாவது சண்பகத்தினது.

ராஜ குமாரன் அம் மூன்றையும் வாங்கிக் கொண்டான்; அரண்மனை வந்தான். மாலையில் கிழவர் வந்தார்; மோதிரங்களைப் பார்த்தார். வெகு சந்தோஷம் அடைந்தார். ராஜாவும்

ராணியும் மிகவும் களித்தார்கள். அன்றைக்கும் காசி ராஜன் பெரிய விருந்து செய்தான். ராஜ குமாரன் சாப்பிட்டு ஸ ுகமாக உறங்கினன்.

மறுநாள் காலை கிழவர் வந்தார்; மூன்று ரோஜா மலர்களைக் கொண்டு வந்தார்; ராஜகுமா ரனுக்குக் காட்டினர்; "இவற்றில் எது உயர்ந் தது?" என்ருர்.

அவை மூன்றும் ஒரே மாதிரி ஆக இருந் தன; ராஜ குமாரனுக்கு ஒன்றும் விளங்க இல்லை. "இந்தப் பூக்களில் எதில் தேன் அதிகமாக இருக்கிறதோ அந்த மலர் உயர்ந் தது; எந்த மலரில் தேன் அதிகம் இருக் கிறதோ? நாம் அதை எப்படி அறிவோம்?" என்று மயங்கினன்.

உடனே ஒரு தும்பி பறந்து வந்தது; அது, "ஓ ராஜ குமாரா? என்னுடைய தேன் அடையை நீ காப்பாற்றினய்; உன் தோழர் களோ அதை கொளுத்திவிட நினைத்தார்கள்; நீ அதை விலக்கினய்; நீ நல்லவன்; உனக்கு நான் உதவி செய்கிறேன்" என்றது.

அது ஒவ்வொரு பூவிலும் நுழைந்து பார்த்தது. ஒரு பூவில் தேன் அதிகம் இருந் ததைக் கண்டது. "இதில் தேன் நிறைய இருக் கிறது" என்றது. ராஜ குமாரன் சந்தோஷம்

அடைந்தான். "பெரியவரே! இப்பூ உயர்ந்தது" என்றான். பெரியவர், "ஸரி, நீ புத்தி சாலிதான்; ஆனால், நான் இட்ட வேலைகளை நீயே செய்ய இல்லை. உனக்கு யார் யாரோ வந்து உதவி செய்தார்கள்; நாளை ஒரு வேலை இடுவேன், அதை நீயே செய்ய வேண்டியது" என்றார் பிறகு போய்விட்டார்.

சோழன் மகன், "ஐயோ! அது எப்படியான வேலையோ? நாம் என்னவா செய்வோம்! எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார்" என்று எண்ணினான். அன்று ராத்திரி அவன் மிகவும் கவலையோடு தூங்கினான்.

அத்தியாயம் 9.

சண்பக மொட்டின் கலியாணம்

மறுநாள் எழுந்தான்; பகவானை ஸ்துதி செய்தான்; "கிழவர் செய்யும் பரீக்ஷையில் தேரவேண்டுமே; பகவானே! கருணைசெய்" என்று வேண்டினான். காலை உணவு உண்டான்? கிழவர் வருகையை எதிர்பார்த்து இருந்தான்.


கிழவர் வந்தார். "ராஜகுமாரா ! நீ நமது ராஜன் புதல்வியை அடையாளம் காட்டு வையா ? அவளைத் தூங்குகிற போது கண்டேன் என்றாயே" என்றான். சோழன் மகன் சிரித்து, "இதுதானா ஒருகஷ்டமான பரீக்ஷை? நான் அடையாளம் காட்டுவேன்" என்றான்.

உடனே கிழவர் அவனை உள்ளே அழைத்துப் போனார். ஒரு மண்டபத்தில் ஆயிரம் கன்னிகைகள் உட்கார்ந்து இருந்தார்கள். அவர்கள் கிழவரைக் கண்டதும் எழுந்தார்கள். அவர் அவர்களை வரிசை ஆக நிற்க வைத்தார்! ராஜ குமாரனுக்குக் காட்டினார்; "இளஞ் சோழா ! இந்தக் கன்னிகைகளில் ஒருத்தி உனது சண்பகம். அவளை நீ அடையாளம் காட்டு" என்றார்.

ராஜ குமாரன் பார்த்தான் ; கன்னிகைகள் எல்லாரும் ஒரே உருவமாய் இருந்தார்கள் ! ஒரே மாதிரி ஆன ஆடை தரித்து இருந்தார்கள். ஒரே வகையான நகைகள் அணிந்து இருந்தார்கள். அவர்களுக்குள் சிறிதும் பேதம் தெரிய இல்லை.

"என்ன செய்வோம் ?" என்று அவன் மயங்கினான். ஆனால் அவனுக்கு ஒன்று அப்போது நினைவுக்கு வந்தது. பாழ் அடைந்த மண்டபத்தில் சண்பகத்தை அவன் கண்டான்

அல்லவா? அப்போது அவள் தூங்கிக் கொண்டு அல்லவா இருந்தாள்? அவன் அப்



போது குனிந்து அவளை முத்தம் இட்டான் என்று உங்களுக்குத் தெரியுமே: அப்போது

அவன் மூச்சுக் காற்று சண்பக மலரின் மணம் வீசிற்று. அதை அவன் நினைத்துக் கொண்டான்.

"நாம் இந்த மங்கையர் அருகில் போய்ப் பார்ப்போம்; எவள் சுவாஸம் முன் வீசிய சண்பக மலரின் வாஸனை வீசுமோ அவளே நமது அருமை மனைவி" என்று நினைத்தான். அப்படியே ஒவ்வொருத்தியின் அருகேயும் போய், பார்த்தான்; எல்லாருடைய மூச்சும் கெட்ட நாற்றம் வீசிற்று; கடைசியில் சண்பகத்தின் அருகேயே வந்தான்; கமகம என்று சண்பக மலர் வாஸனை அடித்தது.

"இவளே என் மனைவி! இவளே என் காதலி! இவளையே நான் முத்தம் இட்டேன்; இப்படியே இட்டேன்" என்று அவளை முன் இட்டதுபோல முத்தம் இட்டான். கிழவர் வெகு ஸந்தோஷம் அடைந்தார். காசி ராஜாவுக்கும் ராணிக்கும் ஆனந்தம் கரை கடந்து பெருகிற்று; அவர்கள் ராஜ குமாரனைக் கட்டி அணைத்தார்கள். "நீயே உண்மையான சூரன்" என்றார்கள்.

நல்ல நாளில் சண்பகத்திற்கும் சோழன் புத்திரனுக்கும் கல்யாணம் நடந்தது. சோழ ராஜனும் வந்து இருந்தான்.

அவன் மிகவும் சந்தோஷம் அடைந்தான். தன் மகனை மெச்சினன். கிழவர் சேரன்



மகனைக் குதிரை ஆகவும், பாண்டியன் மகனை நாய் ஆகவும் ஆக்கி விட்டார். சோழன் மகன்

'வேண்டாம், வேண்டாம்' என்று சொல்லிக் கெஞ்சினான்.

கிழவர், "இவர் உன்னை மோசம் செய்ய எண்ணினர் ; அதற்கு இது தண்டனை ; இவர்கள், 'ஐயோ ! நாம் பண்ணினது பாவம் அல்லவா ? இனி ஒரு நாளும் பாவம் செய்யக் கூடாது' என்று நினைக்கிற வரையில் குதிரையும் நாயும் ஆக இருக்கவேண்டும் ; உனக்கு வேலை செய்யவும் வேண்டும்" என்றார்.

கொஞ்சம் நாள் ஆயின. அந்த இரண்டு ராஜகுமாரர்களும் புத்தி உடையவர்கள் ஆனார்கள். கிழவர் அவர்களை மறுபடி ராஜகுமாரர்கள் ஆக்கினர் ; அவர்கள் தமது ஊருக்குப் போனார்கள்.

சோழன், தனது மகனுக்கு உத்தம ராஜகுமாரி கிடைத்தாள் என்று ஸந்தோஷம் அடைந்தான் ; தனது மருமகளை மெச்சி ஆனந்தப்பட்டான் ; மகனையும் மருமகளையும் தனது நாடு அழைத்துப் போனான். தனது பட்டணமான உறையூரில் சிறப்பாகக் கலியாணம் நடத்தினான். சண்பகமும் அவள் கணவனும் அங்கே ஸுகமாய் வாழ்ந்தார்கள். அவர்களுக்குக் குழந்தைகளும் பிறந்தன.

சோழனுக்குப் பிறகு இளஞ் சோழன் கீர்த்திமானாய் ராஜ்யம் ஆண்டான். இவன் இளஞ் சேட்சென்னி என்ற பெயரை அடைந்தான். மிகவும் புகழ் பெற்றான்.

திருமாவளவன் என்ற சோழன் இந்த இளஞ் சேட்சென்னியின் புதல்வன். ஆனால் இவன் அந்தக் காசி ராஜன் குமாரிக்குப் பிறந்தவன் அல்லன். அவளுக்குச் சேட்சென்னி என்று ஒரு மகன் பிறந்து புகழ் பெற்றான். அக் கதைகளை நீங்கள் பெரியவர்கள் ஆன பிறகு சங்கசிந்தாமணி என்ற நூலில் படிக்கலாம்.

FINIS

Printed at the 'Aurora Press,' Madras — 1927.

ஸ்ரீ:

மேற்கணக்கு வகை

அகநானூறு

எட்டுத்தொகை நூலுள் ஒன்றாகிய இது பழைய உரையுடனும் ஸ்ரீவத்ஸ சக்ரவர்த்தி ராஜகோபாலார்யன் எழுதிய குறிப்புரையுடனும் சிறந்து விளங்குகின்றது. சங்க காலத்துத் தமிழ் மக்களின் கொடை, வீரம், கல்வி, இல்லறவியல், நீதி முதலியவற்றை அறிவிக்கும் பல ஆராய்ச்சிக் குறிப்பு, அபிதானக் குறிப்பு, பொருட் குறிப்பு முதலியனவும், நூற்றுநாற்பத்தைந்து புலவர்களின் சரிதமும், தேவர் அரசர் முதலியோரில் ஒரு நூற்றுக்கு மேலானவர்களின் வரலாறுகளும் பிற சரித்திரக் குறிப்புக்களும் அடங்கியுள்ளது. சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமானது.

விலை ரூ. **10**

கீழ்க்கணக்கு வகை

நாலடியார்

திருக்குறளோடொப்பச் சிறப்பித்துச் சான்றோராற் கொண்டாடப் பெற்றதான இந்நூல் பரிப்பெருமாள், பதுமனார் என்ற பழைய உரையாசிரியர்களின் கருத்தை அமைத்து எழுதிய உரையோடும், அரும்பத வகராதியோடும் நூலாராய்ச்சி, காலவாராய்ச்சி முதலான பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும் சிறந்து விளங்குவது. காலிகோ பயிண்டு.

விலை ரூ. **1—8**

நான்மணிக்கடிகை

இது நானூற்றுக்கு மேற்கொண்ட நீதிகளையுடையதாய்க் கற்போர் மனத்தைக் கவரும் இழுமென் சொல்லானியன்று விழுமியது பயக்குப் அரியதொரு நூலாய் விளங்குகின்றது. இந்நூற்பதிப்பு அந்நானூற்றுக்கு மேற்கொண்ட நீதிகளையும் அகராதி வரிசைப்படுத்தும், பழைய வுரையோடும் விசேஷக் குறிப்புக்களோடும், அரும்பத அகராதியோடும் திருத்தமுறப் பதிக்கப்பெற்றிருக்கின்றது. கெட்டியான அட்டைபைண்டு செய்துள்ளது.

விலை அணா **6**